செ.வெ.எண்: 607 நாள்: 31.10.2011.

## பத்திரிக்கைச் செய்தி

1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, சொத்துப் பரிமாற்றத்தின் போது, சொத்தின் சந்தை மதிப்பிற்கு ஏற்றவாறு முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டும். குறைவான மதிப்புடன், சொத்தின் சந்தை மதிப்பிற்கு ஏற்றவாறு முத்திரைத் தீர்வை செலுத்தப்படாத ஆவணங்கள், அவற்றைப் பதிவு செய்தவுடன், சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயம் செய்ய இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏவின் படி, சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோருக்கு அனுப்பப்படுகின்றன. 31.07.2011 அன்றுள்ளவாறு இவ்வாறு சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோருக்கு அனுப்பப்பட்ட 39,812 ஆவணங்கள் நிலுவையில் இருந்ததால், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைத் திரும்பப் பெறுவதில் பொது மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மேலும் இந்த ஆவணங்களில் அரசுக்கு வரவேண்டிய வருவாயும் அதிக அளவில் முடங்கியுள்ளது.

இவ்வாறு அதிக அளவில் நிலுவையாக உள்ள ஆவணங்களைத் தீர்வு செய்வதுடன், பொது மக்களும் தங்களது பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை விரைவாகத் திரும்பப் பெற ஏதுவாகவும் அதன் மூலம் இவ்வாவணங்களில் முடங்கியுள்ள அரசு வருவாயை ஈட்டும் நோக்குடனும் 2011–2012ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் **சமாதானத் திட்டம்** ஒன்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, பதிவுத் துறையில் 1.11.2011 முதல் **சமாதானத் திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, பொது மக்கள் பதிவு செய்யப்பட்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏவின்படி நிலுவையாக உள்ள ஆவணங்களை, வழிகாட்டி மதிப்புப் படி செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும், ஏற்கனவே செலுத்தியுள்ள முத்திரைத் தீர்வைக்கும் இடையேயான வேறுபாட்டில் மூன்றில் இரண்டு பங்கை (அதாவது 2/3) மட்டும் செலுத்தி திரும்பப் பெற்றுக்

கொள்ளலாம். 31.7.2011 அன்றுள்ளவாறு பிரிவு 47ஏவின்படி சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய நிலுவையாக உள்ள ஆவணங்களுக்கும், பிரிவு 47ஏவின்படி சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய அனுப்புவதற்காக பதிவு அலுவலர்களிடம் நிலுவையாக உள்ள ஆவணங்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். மேலும், வித்தியாச முத்திரைத் தீர்வையை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்திலேயே செலுத்தலாம். இத்திட்டம் 1.11.2011 முதல் மூன்று மாதங்களுக்கு அமலில் இருக்கும்.

பதிவு செய்யப்பட்டு, பிரிவு 47ஏவின்படி நிலுவையாக உள்ள ஆவணங்களைப் பதிவு செய்த பொது மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சுனீல் பாலிவால்
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9